# மழைக் காலங்களில் ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை பயிற்சி

By DIN | Published on : 20th November 2017 02:28 AM | அ+அ அ- |

நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மழைக் காலங்களில் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்த பயிற்சி வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்கு அண்மையில் நடைபெற்றது.

திருவாரூர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (மத்தியத் திட்டம்) அ. மதியழகன் பங்கேற்று, "மழைக் காலங்களில் நெற்பயிர் பாதுகாப்பு முறைகள்' என்ற கையேட்டை வெளியிட்டு தொடங்கி வைத்தார்.

வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ. பாஸ்கரன், வேளாண்மை துணை இயக்குநர் (மாநிலத் திட்டம்) ப. சிவகுமார், வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) ஆ. சந்துரு, தோட்டக்கலை துணை இயக்குநர் அ.இ. சுரேஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ராஜா. ரமேஷ், மழைக் காலங்களில் நெற்பயிரைப் பாதுகாக்க மேற்கொள்ளவேண்டிய ஊட்டச்சத்து மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகள் குறித்தும் பூச்சி மற்றும் நோய் மேலாண்மையில் உயிரியல் மற்றும் தாவர பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாட்டை எடுத்துரைத்ததுடன், ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளை இறுதி வாய்ப்பாக மட்டுமே பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

இதனால் சுற்றுச்சூழல் சீர்கேட்டை தடுக்க முடியும், தானியங்களை நஞ்சில்லாமல் விளைவிக்க முடியும் என்பதை தெரிவித்து ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பின் மூலம் குறைந்த செலவில் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்தி அதிக விளைச்சல் பெறலாம் என்பது குறித்தும் அவர் விளக்கிக் கூறினார்.

இந்தப் பயிற்சியில் திருவாரூர் மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து வேளாண்மை உதவி இயக்குநர்கள், அலுவலர்கள், துணை அலுவலர்கள், உதவி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.